# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.148/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சண்முகசுந்தரம் | த-பெ | குப்புசாமி சேர்வை |
| ஊர்: | : | கோட்டையூர் | | |
| வயது: | : | 75/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

2 மற்றும் 4 ம் **எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து வருகிறேன். தோட்டக்கலைத் துறையில் இணை இயக்குநராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். கடந்த 03.05.2013 அன்று நான் எனது வீட்டிற்கு இரவு 10.00 மணியளவில் உவேசா தெருவில் வந்து கொண்டிருந்தபோது பள்ளத்தூர் போலீசார் அங்கு இருந்த பக்கத்து வீட்டில் செயின் பறிப்பு விபரம் குறித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து கையொப்பம் கேட்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

1. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் அருகில் உள்ள வீட்டுக்காரர் என்பதால் அவரை தெரியும் என்றால் சரிதான். புகார்தாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.22 13:17:46 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.